**செய்தி வெளியீடு எண்: 37/2022** **நாள்: 07.06.2022**

**பத்திரிக்கை செய்தி**

**<u>சென்னை மெட்ரோ இரயில் நிலையங்களில் இருசக்கர வாகன நிறுத்தம் பெண்களுக்கு தனி இடவசதி செய்ய திட்டம்</u>**

**<u>இயக்குநர் திரு. ராஜேஷ் சதுர்வேதி (அமைப்புகள் மற்றும் இயக்கம்), தகவல்</u>**

கோயம்பேடு மெட்ரோ இரயில் நிலையத்தில் இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்த போதிய இடவசதி செய்யப்பட்டு வருவதாகவும், இதில் பெண்களுக்கென்று தனி இட வசதி செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாகவும் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குநர் திரு. ராஜேஷ் சதுர்வேதி (அமைப்புகள் மற்றும் இயக்கம்), தெரிவித்துள்ளார்.

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் கோயம்பேடு மெட்ரோ இரயில் நிலையத்தில் கூடுதலாக இருசக்கர வாகனம் நிறுத்துவதற்கான இடத்தை திறந்து வைத்த சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் இயக்குநர் திரு. ராஜேஷ் சதுர்வேதி (அமைப்புகள் மற்றும் இயக்கம்), இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சென்னை மெட்ரோ இரயில் நிலையங்களில் தற்போது வாகனங்கள் நிறுத்துவதற்கான இடம் விரிவு படுத்த நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளது. அதற்கான மெட்ரோ இரயில் நிலையங்களில் உள்ள பயன்படுத்தப்படாத இடங்களை கண்டறிந்து இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்த கூடிய வகையில் வழிவகை செய்யப்பட்டு வருகிறது. தற்போது வாகனங்கள் நிறுத்த கூடிய இடத்திற்கு அருகாமையில் கூடுதலாக வாகனங்கள் நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இப்பணி விரைவில் முடிக்கப்படும். பயணிகளுக்கான பல்வேறு வசதிகளில் வாகனங்கள் நிறுத்த இடமும் முக்கியமானது. இந்த வாகன நிறுத்தத்தில் பெண்கள் தங்களது இருசக்கர வாகனங்களை தனியாக வைக்க வேண்டும் என்ற கோரிக்கை வைத்துள்ளார்கள். அவர்களது கோரிக்கை விரைவில் நிறைவேற்றப்படும். அதுமட்டும் அல்ல பயணிகளின் தேவையான வசதிகளை கண்டறிந்து அதற்கான வழிவகைகளும் செய்ய சென்னை மெட்ரோ இரயில் நிர்வாகம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

இவ்வாறு இயக்குநர் திரு. ராஜேஷ் சதுர்வேதி (அமைப்புகள் மற்றும் இயக்கம்), தெரிவித்துள்ளார்.

கோயம்பேடு மெட்ரோ இரயில் நிலையத்தில் ஏற்கனவே, வாகன நிறுத்த இடத்திற்கு அருகாமையில் 1500 சதுர மீட்டர் பரப்பளவில் கூடுதலாக 800 இருசக்கர வாகனங்கள் நிறுத்துவதற்கான இடவசதி செய்யப்பட்டுள்ளது.

இதுபோன்று மற்ற மெட்ரோ இரயில் நிலையங்களிலும் கூடுதலாக வாகன நிறுத்துவதற்கான வசதி செய்யப்படும்.

இந்நிகழ்ச்சியில் சென்னை மெட்ரோ இரயில் நிறுவனத்தின் முதன்மை பொது மேளாலர் ஏ.ஆர்.ராஜேந்திரன், கூடுதல் பொது மேலாளர் எஸ். சதீஷ்பிரபு, மேலாளர்கள் பி. லட்சுமி (வருவாய்), கே.எஸ்.அருண் (இயக்கம்), துணை மேலாளர் ஏ.அருள்ராதா (இயக்கம்) மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**
**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600107.**